11410



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**85 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)

ගෘහ ආර්ථික විද්‍යාව I, II
மனைப் பொருளியல் I, II
Home Economics I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## மனைப் பொருளியல் I

**அறிவுறுத்தல்கள்:**

※ **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**

※ **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.

※ **உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உங்கள் விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி (×) இடுக.**

※ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** இரசாயன கலவையில் நைட்ரஜன் **அடங்காத** சோடியைத் தெரிவுசெய்க.
(1) பெக்டின் மற்றும் இனியுலின்
(2) இனியுலின் மற்றும் கொலஜன்
(3) கொலஜன் மற்றும் இலக்கியுமின்
(4) பெக்டின் மற்றும் இலக்கியுமின்

**2.** பின்வருவனவற்றுள் லைசீன் குறைபாடுள்ள உணவு வகை யாது?
(1) சோளம் (2) கௌப்பி (3) போஞ்சி (4) அவரை

**3.** புரோதுரோபின் உற்பத்திக்குத் தேவையான விற்றமின் எது?
(1) விற்றமின் A (2) விற்றமின் D (3) விற்றமின் E (4) விற்றமின் K

**4.** நுண்ணுயிர்ப் போசணைப் பதார்த்தங்கள் பின்வருமாறு
A - விற்றமின் A
B - விற்றமின் K
C - செலனியம்
இவற்றுள் எதிரொட்சியேற்றியானது எது?
(1) A, B
(2) A, C
(3) B, C
(4) A, B, C ஆகியன அனைத்தும்

**5.** போசணைப் பதார்த்தம், அதன் குறைபாடு / குறைபாட்டு அறிகுறிகள் என்பன சரியாக பொருந்தியிருக்கும் விடையைத் தெரிவுசெய்க.
(1) அயடின் - மிக்சோடிமா
(2) குளோரின் - பல் நோய்கள்
(3) சல்பர் - வெளிறல் நிலை
(4) நாகம் - தசைப் பிடிப்பு

**6.** பின்வருவனவற்றுள் இரும்பு அகத்துறுஞ்சலைக் குறைக்கும் காரணி யாது?
(1) சிற்றிக் அமிலம்
(2) லைசீன்
(3) பயிற்றிக் அமிலம்
(4) அஸ்கோபிக் அமிலம்

**7.** பாலில் அதிகமாக அடங்கியுள்ள போசணைப் பதார்த்த சோடி யாது?
(1) இரும்பும் விற்றமின் D யும்
(2) விற்றமின் A மற்றும் விற்றமின் $B_2$
(3) கல்சியமும் விற்றமின் E யும்
(4) விற்றமின் K மற்றும் விற்றமின் $B_1$

[பக். 2 ஐப் பார்க்க

**8.** அமிலேசு நொதியம் தொடர்பான **பிழையான** கூற்று எது?
(1) உமிழ்நீர்ச் சுரப்பிகளினால் சுரக்கப்படுகின்றன
(2) மோல்டோசை, குளுக்கோசாக்கும்
(3) ஐதரோகுளோரிக் அமிலம் மூலம் செயலிழக்கும்
(4) சதையச் சாற்றில் அடங்கியுள்ளது

**9.** பின்வருவனவற்றுள் வாழ்க்கைச் சக்கரத்தின் பிள்ளைப் பருவம், கட்டிளமைப் பருவம், கர்ப்பிணி மற்றும் முதுமைப் பருவங்களில் அதிகமாக பெற்றுக்கொள்ள வேண்டிய உணவு வகை யாது?
(1) சக்தியை வழங்கும் உணவுகள் (2) போலிக்கமிலம் அடங்கிய உணவுகள்
(3) கல்சியம் அடங்கிய உணவுகள் (4) நார்ப்பொருள் அதிகமுள்ள உணவுகள்

**10.** பின்வருவனவற்றுள் நாளாந்த போசணைத் தேவைக் குறிப்பில் கிராமில் குறிப்பிடப்பட்டிருக்கும் போசணைப் பதார்த்தம் எது?
(1) இரும்பு (2) கல்சியம் (3) புரோட்டின் (4) மங்னீசியம்

**11.** இரவு உணவுவேளை ஒன்றிற்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட உணவுகளில் அடங்கியுள்ள போசணைப் பதார்த்தங்களின் அளவீடுகள் பின்வருமாறு
காபோவைதரேற்று - 70 கிராம்
புரோட்டின் - 30 கிராம்
கொழுப்பு - 5 கிராம்
மேற்கூறப்பட்டுள்ள உணவு வேளையில் அடங்கியுள்ள மொத்தக் கலோரிப் பெறுமானம்
(1) 445 கிலோ கலோரியாகும். (2) 560 கிலோ கலோரியாகும்.
(3) 690 கிலோ கலோரியாகும். (4) 815 கிலோ கலோரியாகும்.

**12.** பின்வருவனவற்றுள் திரவக்குழையல் மாவைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் உணவுச் சோடி எது?
(1) லவரியா, அப்பம் (2) கொக்கிஸ், பான்கேக் (சுருட்டப்பம்)
(3) கேக், பால்ரொபி (4) தோசை, பாசிப்பயறு பலகாரம்

**13.** பின்வருவனவற்றுள் உலர் வெப்பச் சமையல் முறை **அல்லாதது** எது?
(1) தட்டில் சுடுதல் (2) ப்ரேஸ் செய்தல்
(3) ரோஸ்ட் செய்தல் (4) டோஸ்ட் (வாட்டுதல்) செய்தல்

**14.** மேலைத்தேய முறையில் மேசையை ஒழுங்குபடுத்தி, ஒழுங்கான வகையில் உபசரித்தலுடன் தொடர்பான **பிழையான** விடையைத் தெரிவுசெய்க.
(1) நீர்க் குவளையை பீங்கானின் வலது புறம் வைத்தல்
(2) கரண்டியையும் சூப் கரண்டியையும் பீங்கானின் வலதுபுறம் வைத்தல்
(3) முள்ளுக்கரண்டி மற்றும் கத்தியை பீங்கானின் இடது புறம் வைத்தல்
(4) சூப் பாத்திரத்தை பீங்கானின் மேல் வைத்தல்

**15.** சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) நுண்ணுயிர்களின் வளர்ச்சிக்கு உகந்த வெப்பமானது $20^0C$ இற்கு அண்மித்த வெப்பமாகும்.
(2) நுண்ணுயிர்களின் சுவாசத்திற்கு ஒக்சிஜன் அத்தியாவசியமாகும்.
(3) நீர்ச் செயற்பாடு அதிகரிக்கும் போது நுண்ணுயிர்களின் வளர்ச்சி குறைவடையும்.
(4) மைக்கோ பற்றீரியம் பால் அடி மூலக்கூறாகப் பயன்படுத்தப்படும் நுண்ணுயிராகும்.

**16.** பின்வருவனவற்றுள் pH பெறுமானம் குறைவடைவதால் நற்காப்படைவது எது?
(1) கருவாடு (2) தேங்காய்ரொபி (3) மாம்பழ ஜாம் (4) உள்ளூர் அச்சாறு

**17.** மரஸ்மஸ் தொடர்பான சரியான கூற்று எது?
(1) வீக்கமடைதல் ஏற்படுதல் (2) முதிர்ந்த தோற்றம் ஏற்படுதல்
(3) தலைமுடி செப்புநிறமாதல் (4) குருதியில் ஈமோகுளோபின் குறைவடைதல்

**18.** கட்டிளைமைப் பருவ வளர்ச்சியுடன் தொடர்புடைய பின்வரும் விடயங்களுள் **பிழையானது** எது?
(1) இனப்பெருக்க ஓமோன்கள் சுரப்பதில் பிட்டியூட்டரிச் சுரப்பிகள் (கபச் சுரப்பிகள்) தாக்கம் செலுத்துகின்றன.
(2) இப் பருவத்தின் போது உடல் உறுப்புகளுக்கிடையிலான விகிதசமம் சமமற்றதாகும்.
(3) மாறும் சூழலுக்கு இயைபடையும் இயலுமை உளவளர்ச்சியின் ஊடாக ஏற்படுவதாகும்.
(4) உலக சுகாதார அமைப்பிற்கேற்ப, கட்டிளமைப் பருவமானது 10-19 வயதிற்கு இடைப்பட்ட காலப் பகுதியாகும்.

[பக். 3 ஐப் பார்க்க

**19.** கட்டிளமைப் பருவத்தினர் வெளிப்படுத்தும் அசாதாரணமான நடத்தை
(1) தாழ்வுமனப்பான்மை ஆகும். (2) கோபப்படுதல் ஆகும்.
(3) பகற்கனவு காணுதல் ஆகும். (4) வீரவணக்கம் ஆகும்.

**20.** கட்டிளமைப் பருவப் பெண் பிள்ளையொருவரின் உடல் வளர்ச்சியின் உயர்வு ஆரம்பமாகி முடிவடைவது
(1) 8 மற்றும் 12 வயதிலாகும். (2) 10 மற்றும் 14 வயதிலாகும்.
(3) 12 மற்றும் 16 வயதிலாகும். (4) 13 மற்றும் 17 வயதிலாகும்.

**21.** பாலியல் மூலமான தொற்றுக்களில் ஒன்றான சிபிலிசுவுடன் தொடர்பான சரியான வாக்கியத்தைத் தெரிவுசெய்க.
(1) சிகிச்சையளிக்காவிடில் இருதயத்தில் தாக்கம் ஏற்படும்.
(2) கர்ப்பிணித்தாயின் குழந்தைக்குத் தொற்றாது.
(3) இதனால் ஏற்படும் காயம் வலியுடன் கூடியதாகயிருக்கும்.
(4) நோயெதிர்க் கொல்லிகள் மூலம் குணப்படுத்தினாலும் மீண்டும் ஏற்படக்கூடும்.

**22.** இனப்பெருக்கம் தொடர்பான சரியான கூற்று எது?
(1) சுமார் 60 வயது வரை விந்தணுக்களுக்கு கருக்கட்டும் தன்மை காணப்படும்.
(2) சூல் மற்றும் விந்தணு கருக்கட்டல் பலோபியன் குழாயின் நடுப்பகுதியில் நடைபெறுகிறது.
(3) கருக்கட்டலின் பின்பு முளையம் கர்ப்பப்பையின் சுவரில் உட்பதியும்.
(4) விதையினுள் விந்து உற்பத்தியும் களஞ்சியப்படுத்தலும் நடைபெறும்.

**23.** மாதவிடாய்ச் சக்கரத்தின் கருவளக்காலம் என அழைக்கப்படுவது
(1) 5 தொடக்கம் 14 நாட்கள் வரை ஆகும். (2) 7 தொடக்கம் 21 நாட்கள் வரை ஆகும்.
(3) 10 தொடக்கம் 18 நாட்கள் வரை ஆகும். (4) 12 தொடக்கம் 25 நாட்கள் வரை ஆகும்.

**24.** தொப்புள் கொடியின் தொழிற்பாடு என்ன?
(1) அதிர்ச்சியிலிருந்து முதிர் மூலவுருவைப் பாதுகாத்தல் ஆகும்.
(2) முதிர்மூலவுரு வளர்ச்சிக்குத் தேவையான ஹோமோனை உற்பத்தி செய்தல் ஆகும்.
(3) முதிர்மூலவுருக்குத் தேவையான போசணைப் பதார்த்தத்தை வழங்குதல் ஆகும்.
(4) குழந்தைப் பிரசவத்தை இலகுபடுத்தல் ஆகும்.

**25.** சிசு ஒன்றின் தலையின் அளவு உடல் நீளத்தின்
(1) $\frac{1}{3}$ ஆகும். (2) $\frac{1}{4}$ ஆகும். (3) $\frac{1}{5}$ ஆகும். (4) $\frac{1}{6}$ ஆகும்.

**26.** பிள்ளையொருவருக்கு போலியோ தடுப்பூசியின் நான்காவது சொட்டு வழங்கப்படுவது
(1) 9 மாத நிறைவிலாகும். (2) 12 மாத நிறைவிலாகும்.
(3) 18 மாத நிறைவிலாகும். (4) 5 வயது நிறைவிலாகும்.

**27.** சில விளையாட்டுப் பொருட்களின் அம்சங்கள் பின்வருமாறு
A- பாரமற்றது
B- கழட்டிப் பொருத்த முடியும்
C- காற்று நிரப்பப்பட்டிருக்கும்
D- பல்வேறு நிறங்களைக் கொண்டிருக்கும்
இவற்றுள் ஆறு மாத குழந்தைக்கு மிகவும் பொருத்தமான விளையாட்டுப் பொருளானது
(1) A, C மாத்திரம் (2) B, C மாத்திரம்
(3) B, D மாத்திரம் (4) A, C, D மாத்திரம்

**28.** பொருத்து வகைகளுடன் தொடர்புடைய **பிழையான** விடயத்தைத் தெரிவுசெய்க.
(1) குசன் உறையைத் தைக்கும்போது பிரான்சிய பொருத்தை பயன்படுத்துவதன் மூலம் சிறந்த நேர்த்தியைப் பெற்றுக்கொள்ள முடியும்.
(2) தட்டைப் பொருத்தை தைத்ததன் பின்பு நல்ல பக்கத்தில் தெரிவது விளிம்புத் தையல் மாத்திரமே.
(3) ஆடையொன்றில் சுருக்கப்பட்ட பகுதியையும் சுருக்கப்படாத பகுதியையும் தொடர்புபடுத்துவதற்கு மேற்செறிப் பொருத்தைப் பயன்படுத்துவர்.
(4) திறந்த தட்டைப் பொருத்தை தைக்கும் போது பொருத்திற்குள்ளான இருதுணிகளையும் ஒரே பக்கத்திற்குத் திருப்பி விளிம்பு நேர்த்தியாக்கப்படும்.

[பக். 4 ஐப் பார்க்க

**29.** ஆக்கமொன்றை நிர்மாணிப்பது தொடர்பான சில செயற்பாடுகள் பின்வருமாறு

A – அலங்காரத் தையல் முறையைப் பயன்படுத்தியிருத்தல்

B – அடிப்படைத் தையல் முறைகளையும் நுட்ப முறைகளையும் பயன்படுத்துதல்

C – முறையாகத் தைத்தல்

இவற்றில் நிர்மாணமொன்றின் அலங்காரம் மற்றும் சிறந்த நேர்த்திக்கு முக்கியமான செயன்முறை/ செயன்முறைகளாவன

(1) A மாத்திரம் (2) B மாத்திரம்
(3) A, C மாத்திரம் (4) B, C ஆகியன மாத்திரம

**30.** அலங்காரத் தையல் முறைகள் சிலவற்றின் வரிப்படங்கள் பின்வருமாறு



இத்தையல் முறைகள் ஒழுங்கு முறையில்

(1) சற்றின் தையல் (அடைப்புத்தையல்) பூளியன் தையல் (புழுத்தையல்), மீன் முள்ளுத் தையல் ஆகும்.
(2) பூளியன் தையல், மீன் முள்ளுத் தையல் மற்றும் சற்றின் தையல் ஆகும்.
(3) மீன் முள்ளுத் தையல், சற்றின் தையல், பூளியன் தையல் ஆகும்.
(4) சற்றின் தையல், மீன்முள்ளுத் தையல் மற்றும் பூளியன் தையல் ஆகும்.

**31.** சரியான கூற்றைத் தெரிவு செய்க

(1) பெருநூலோடல் மற்றும் சிறுநூலோடல் என்பன நிரந்தரத் தையல்களுக்கு உரியனவாகும்.
(2) நரம்புத்தையலை ஒன்றிற்கொன்று நெருக்கமாகத் தைப்பதால் அலங்காரமொன்றிற்கு நிரப்பியத் தோற்றத்தைத் தரும்.
(3) தெறி பிடிக்கும்போது தெறியிலுள்ள துளைகளுக்கிடையில் குண்டூசியை வைத்து அதன் குறுக்காக துளைகளுக்கிடையில் தைத்தல் வேண்டும்.
(4) ரமீ (ரெப்) தாவர நார்களிலொன்றாவதுடன், ஓர்லோன் அரை செயற்கை நாராகும்.

**32.** 52 செ.மீ 52 × செ.மீ அளவிலான கபிலநிற கடதாசியொன்றில் குழந்தை ஆடையொன்றின் மாதிரியுருவை உருவாக்கும் சரியான முறை யாது?

(1) சரிவுக்கோட்டினூடாக மடித்துக்கொள்ள வேண்டும்.
(2) நிலைக்குத்து வடிவில் இரண்டாக மடித்துக்கொள்ள வேண்டும்.
(3) கிடையாக இரண்டாக மடித்துக்கொள்ள வேண்டும்.
(4) 2 செ.மீ நிலைக்குத்தாக அளந்து இரண்டாக மடித்துக்கொள்ள வேண்டும்.

**33.** குழந்தை ஆடையொன்றின் மாதிரியுருவை நிர்மாணிப்பதுடன் தொடர்பான சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

(1) கைக்குழைச்சடி அளவு எடுப்பது தோளில் இருந்து இடுப்பு வரையுள்ள உயரத்தை நான்கால் வகுப்பதன் மூலமாகும்.
(2) கணிக்கப்பட்ட முன்பக்க இடுப்பின் அளவு மற்றும் பின்புற இடுப்பின் அளவு சமமானதாகும்.
(3) இடுப்பிற்கிடையிலான அகலத்தை இரண்டால் வகுக்க வேண்டும்.
(4) முன்பக்க மற்றும் பின்பக்க குறுக்களவு பெறப்படுவது கழுத்து ஆழத்திலிருந்து 7 செ.மீ. கீழாகும்.

**34.** கழுத்து வடிவிற்கு அலங்கார நாடா பிடித்தல் என்பது

(1) கழுத்து வடிவில் பட்டியொன்றைப் பிடித்து அதனை முழுமையாக மாற்றித் தைத்தலாகும்.
(2) குறுக்குப் பட்டியொன்றைப் பிடித்து அதனை புறப்பக்கம் திருப்பி, அரைவாசி மடித்துத் தைத்தலாகும்.
(3) குறுக்குப் பட்டியொன்றைப் பிடித்து அதனை முழுமையாக புறப்பக்கம் திருப்பித் தைத்தலாகும்.
(4) நேரான பட்டியொன்றைப் பிடித்து அதனைப் புறப்பக்கமாகத் திருப்பி அரைவாசியை மடித்துத் தைத்தலாகும்.

[பக். 5 ஐப் பார்க்க

**35.** சரியான விடையைத் தெரிவுசெய்க.
(1) பிள்ளைக்கான ஆடையொன்றைத் தைக்கும்போது உடற்பகுதியில் பக்கப் பொருத்தை இருபக்கங்களுக்கும் திருப்ப வேண்டும்.
(2) பிள்ளைக்கான ஆடையொன்றின் பின்புற திறப்பை தைத்து முடிவடைந்ததன் பின்பு இடது பக்கம் மேல் இருக்கும் வகையில் வைத்தல் வேண்டும்.
(3) கிடையான தெறியோட்டையை இரு நேர் விளிம்புகளுடன் தைத்தல் வேண்டும்.
(4) பிள்ளை ஆடையின் பொம்மற்கை நிர்மாணத்தைத் தைக்கும் போது கையின் கீழ் பொருத்தை தைதத்ததன் பின்பு கைக்குழைச்சடி மற்றும் கையின் கீழ்ப் பகுதிகளைச் சுருக்க வேண்டும்.

**36.** 'குடும்பத்துடன்' தொடர்பான சில வாக்கியங்கள் பின்வருமாறு. சரியான வாக்கியத்தை தெரிவுசெய்க.
(1) வளர்ச்சிப் பருவத்தைக் கடக்கும் குடும்பமொன்றில் தாய், தந்தை, பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் இருக்கலாம்.
(2) கருக் குடும்பமொன்றில் தாய் மற்றும் தந்தை மாத்திரமே இருப்பார்கள்.
(3) முதிர்ச்சிப் பருவத்தைக் கடக்கும் குடும்பமொன்றில் தாய், தந்தை ஆகிய இருவரும் அல்லது ஒருவர் மாத்திரம் இருக்கலாம்.
(4) கூட்டுக் குடும்பமொன்றில் தாய், தந்தை மற்றும் பிள்ளைகள் மாத்திரம் இருப்பார்கள்.

**37.** பின்வருவனவற்றுள் வீடொன்றின் பல் தொழிற்பாடு அலகானது எது?
(1) சாப்பாட்டு அறையில் கழுவும் பேசன் ஒன்று இருத்தல்
(2) வரவேற்பறையில் தொலைக்காட்சியொன்றிருத்தல்
(3) படுக்கையறையினுள் கண்ணாடி மேசையொன்றிருத்தல்
(4) சமையலறையில் ஒரு மேசையும் நான்கு நாற்காலிகளும் இருத்தல்

**38.** குழப்ப நிலை, அசைவு மற்றும் இசைவுத்தன்மை ஆகிய உணர்வுகளைத் தரும் கோட்டு வகையானது
(1) கிடைக் கோடுகள் ஆகும்.
(2) வளைநெளி கோடுகள் ஆகும்.
(3) வளை கோடுகள் ஆகும்.
(4) சரிவுக் கோடுகள் ஆகும்.

**39.** பின்வருவனவற்றில் எவ் வர்ணச் சோடியைக் கலப்பதால் புடைவர்ணங்களை உருவாக்கலாம்?
(1) ஊதா மற்றும் செம்மஞ்சள்
(2) சிவப்பு மற்றும் பச்சை
(3) செம்மஞ்சள் மற்றும் நீலம்
(4) மஞ்சள் மற்றும் ஊதா

**40.** பௌதிக வளங்கள் மாத்திரம் அல்லாத வளங்களைத் தெரிவுசெய்க
(1) காலம் மற்றும் மின்சாரம்
(2) பணம் மற்றும் நீர்
(3) இடவசதி மற்றும் உழைப்பு
(4) எரிபொருள் மற்றும் சமூக வசதிகள்

* *

[பக். 6 ஐப் பார்க்க

Downloaded from 'Past Papers Wiki'

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**85 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)

ගෘහ ආර්ථික විද්‍යාව I, II
மனைப் பொருளியல் I, II
Home Economics I, II

## மனைப் பொருளியல் II

✳ **முதலாம்** வினாவையும் வேறு **நான்கு** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

✳ **முதலாம்** வினாவுக்கு **20** புள்ளிகளும் ஏனைய வினாக்களுக்கு **10** புள்ளிகள் வீதமும் உரித்தாகும்.

**1.** பின்வரும் நிகழ்வைக் கற்று அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தருக.

பாடசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இலக்கிய தினம் மற்றும் அதன் பரிசளிப்பு விழாவை ஏற்பாடு செய்யும் பொறுப்பு தரம் 11 மாணவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனை ஒட்டிய அலங்காரம் மற்றும் விருந்துபசார செயற்பாடுகளும் அவர்களால் நிகழ்த்தப்படவிருந்தது. அதிதிகளுக்கான விருந்துபசார நடவடிக்கைகள் மனையியற் கூடத்தில் நடாத்தப்படும். இதற்கான மேசை விரிப்பையும் கைத்துடைப்பான்களையும் வடிவமைப்பதற்கு மாணவர்கள் இணங்கினர்.

இவ்விழாவை மிகப் பெரியளவில் நடத்துவது அவர்களது எதிர்பார்ப்பாகும்.

(i) இம் மாணவர்களின் விஷேட போசணைத் தேவைகள் **இரண்டை** எழுதுக.

(ii) இலக்கிய தின விருந்துபசாரத்திற்குப் பேஸ்ட்ரியைப் பயன்படுத்தித் தயாரிக்கக்கூடிய **இரண்டு** உணவு வகைகளைப் பெயரிடுக.

(iii) இச்சந்தர்ப்பத்திற்கு நொதிக்கச் செய்யும் காரணியொன்றைப் பயன்படுத்தித் தயாரிக்கக் கூடிய உணவு வகையொன்றைக் குறிப்பிட்டு, அதற்குரிய நொதியும் இரசாயனத்தைப் பெயரிடுக.

(iv) அதிதிகளுக்கு புதிய மாம்பழப் பானமொன்றைப் பரிமாறுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதில் அடங்கியுள்ள **இரண்டு** போசணைப் பதார்த்தங்களை எழுதுக.

(v) மனையியற் கூடத்தில் விருந்துபசார மேசை விரிப்பை அலங்கரிப்பதற்குப் பயன்படுத்தக் கூடிய **இரண்டு** முறைகளைக் குறிப்பிடுக.

(vi) இங்கு பயன்படுத்தப்படும் கைத்துடைப்பான்களை அலங்கரிப்பதற்குப் பொருத்தமான எம்புரொய்டர் அலங்காரமொன்றை வரைக.

(vii) இவ் விழாவை ஒழுங்குசெய்தல் மாணவர்களின் சமூகமய வளர்ச்சிக்கு உதவும். இதற்கு **இரண்டு** காரணங்களை முன்வைக்குக.

(viii) இம் மாணவர்களுக்கு தேசிய நோயெதிர்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் தடுப்பூசியைப் பெயரிடுக.

(ix) பாடசாலை மண்டபத்தை ஒழுங்குபடுத்தும் போது 'உறுத்தல் இசைவு' மற்றும் 'முறைசார்ந்த சமனிலை' வெளிப்படுத்தும் முறைகள் **ஒவ்வொன்று** வீதம் எழுதுக.

(x) இவ்விழாவுடன் தொடர்பான 'முகாமைத்துவ செயற்பாடுகள்' என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.

**2.** (i) குழந்தை ஆடைகளின் தரத்திற்கு காரணமாய் அமையும் பண்புகள் **மூன்று** எழுதுக.

(ii) ஆடை நிர்மாணிப்பின் போது மாதிரியுருவைப் பயன்படுத்துவதால் கிடைக்கும் நன்மைகள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(iii) குறிப்பெழுதுக.

(a) சிறு குழந்தை ஆடைகளின் வாட்டியின் விளிம்புகளை அலங்கரிப்பதற்குப் பயன்படுத்தக் கூடிய பல்வேறு தையல்கள்

(b) ஆடை நிர்மாணிப்பின்போது பயன்படுத்தப்படும் தோற்றா சோம்தையல்

[பக். 7 ஐப் பார்க்க

Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!

**3.** எட்டு வயதுடைய இரண்டு ஆண்பிள்ளைகள் பாடசாலைக்குக் கொண்டு செல்வதற்காக A, B எனப் பெயரிடப்பட்டுள்ள இரண்டு உணவு வேளைகளுக்கான உணவுகளை தாய்மார்கள் வழங்கியுள்ளனர்.

A - பட்டர் பூசப்பட்ட பர்கர் பனிஸ்
முட்டை ஒம்லட்

B - காய்கறிகள் மற்றும் முட்டை கலந்த நூடில்ஸ்
தக்காளி மற்றும் வெங்காயம் கலந்த சலாது

(i) மேலேயுள்ள இரண்டு உணவு வேளைகளில் அதிகரித்த திணிவு கொண்ட பிள்ளையொருவருக்குப் பொருத்தமான உணவு வேளையைப் பெயரிடுக. அவ்வாறு தெரிவு செய்தமைக்கான **இரண்டு** காரணங்களைக் குறிப்பிடுக.

(ii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள முட்டை ஒம்லட் தயாரிக்கும் முறையை எழுதுக.

(iii) தெரிவு செய்யப்பட்ட உணவு வேளையின் தரத்தை பாதுகாப்பதற்கு, தயாரிக்கும் போதும் சமைக்கும் போதும் பின்பற்ற வேண்டிய செயற்பாடுகள் **இரண்டு** வீதம் எழுதுக.

**4.** இரவு உணவு வேளைக்காக பயன்படுத்தப்பட்ட உணவுப்பட்டியல் கீழே காட்டப்பட்டுள்ளது.

- ஆட்டா ரொட்டி
- கிரில் செய்யப்பட்ட மீன்
- பச்சைப்பட்டாணிக் கடலை மற்றும் கிழங்குக் கறி

(i) மேலே உள்ள உணவு வேளையின் போசணைப் பெறுமானத்தைக் குறிப்பிடுக.

(ii) இவ்வுணவு தயாரிக்கும் போது நிகழும் பிரதான வெப்பம் இடம் மாறும் முறைகளை ஒழுங்கு முறையில் எழுதுக.

(iii) மேலே காட்டப்பட்டுள்ள உணவு வேளைக்கு தெரிவு செய்யப்பட்ட மீனை, புளித்தீயலாகத் தயாரித்து பொதி செய்வதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய படிமுறைகளை பாய்ச்சற் கோட்டுப் படத்தின் மூலம் குறிப்பிடுக.

**5.** (i) வீட்டு வரவு செலவு ஆவணமொன்றைத் தயாரிப்பதால் கிடைக்கும் **மூன்று** நன்மைகளைக் குறிப்பிடுக.

(ii) தனி நிற இசைவினை அடிப்படையாகக் கொண்டு படுக்கை அறையை அலங்கரிக்கக் கூடிய விதத்தை விளக்குக.

(iii) குறிப்பெழுதுக.

(a) மனையொன்றில் உழைப்புப் பகிர்வு

(b) தொகுதிப்படுத்தல்

**6.** (i) முற்பிரசவ அபிவிருத்திப் பருவங்கள் **மூன்றையும்** எழுதுக.

(ii) கர்ப்பிணிப் பருவத்தில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் எனக் கூறப்படும் பிறப்புக் குறைபாட்டு நோய்கள் **இரண்டைப்** பெயரிடுக. இவற்றால் ஏற்படும் பாதக விளைவுகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(iii) குழந்தைப் பருவம் விரைவான இயக்க விருத்தியைக் காட்டும். **நான்கு** உதாரணங்கள் மூலம் விளக்குக.

**7.** (i) 'நெறி பிறள்வு' என்பதை இனங்காண்க.

(ii) "யௌவனப்பருவத்தில் மனவெழுச்சி வெளிப்பாடுகள் விரைவாகவும் தீவிரமாகவும் காணப்படும்". **மூன்று** உதாரணங்களை முன்வைக்குக.

(iii) யௌவனப்பருவ பிள்ளைகளின் உளவளர்ச்சியை வெளிப்படுத்தும் பண்புகள் **நான்கை** விளக்குக.

* * *

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!

PARCEL NO

LOL.lk
BookStore

# විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින් නිවසටම ගෙන්වා ගන්න





කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර | A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් | School Book ගුරු අතපොත්

PADANAMA PUBLICATION | pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම | T | සතර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර, කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා

**සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට**

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**